# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## TERM TEST - I ( 2017-2018 )

**CLASS : VII**

**Maximum Marks : 80** | **TAMIL** | **Time : 3 hours**

மதிப்பெண்கள் : 80 | நேரம் : 3 மணி

## தமிழ்

## பகுதி - அ

1 ) **பின்வரும் பத்திகளைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

காக்கைகள், கூட்டங்கூட்டமாய் வாழும். கோடைக் காலத்தில் கூடு கட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். காக்கை நாள்தோறும் நெடுந்தொலைவு பறந்து திரிந்து உணவு தேடும்.பழம், பூச்சி, சோறு, இறைச்சி என எதையும் இது தின்னும். அதனால் இஃது அனைத்துண்ணி என்று வழங்கப்படுகிறது. இரை தேடிப் போன காக்கைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இருட்டும் முன் கூட்டமாய்ப் பறந்து வந்து, தத்தம் கூடுகளை அடைந்து விடும். காக்கை மிக்க தந்திரமுள்ள பறவை. அது கரைந்து சேர்ந்து உண்ணும். காக்கையை ஆகாயத்தோட்டி என்று வழங்குவர்.

**<u>வினாக்கள்</u>** **5 x 1 = 5**

**1. காக்கைகள் _______ வாழும்.**

அ ) கூட்டங்கூட்டமாய் ஆ) தனித்தனியாய்

இ) தண்ணீரில் மட்டுமே ஈ) இருட்டான பகுதிகளில் மட்டுமே

**2. காக்கை __________ வகையைச் சார்ந்தது.**

அ ) தாவரவுண்ணி ஆ) மாமிசவுண்ணி

இ) அனைத்துண்ணி ஈ) புலால் உண்ணி

**3. காக்கை __________ கூடுகட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.**

அ ) குளிர் காலத்தில் ஆ) கார் காலத்தில்

இ) வசந்த காலத்தில் ஈ) கோடைக் காலத்தில்

**4. காக்கையை __________ என்று வழங்குவர்.**

அ ) ஆகாயத்தோட்டி ஆ) ஆகாய முல்லை

இ) ஆகாயத் தாமரை ஈ) ஆகாயத் தென்றல்

**5. காக்கை ________.**

அ ) கொக்கரிக்கும் ஆ) கரையும்

இ) குனுகும் ஈ) கூவும்

2) பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டையபுரத்தில் 11.12.1882 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் சின்னச்சாமி ஐயர்.தாயார் இலக்குமி அம்மையார். இளமையிலேயே கவி பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தமையால் சான்றோர்கள் "பாரதி" எனப் பெயர் சூட்டினர். இவர் தேசியக்கவி, விடுதலைக் கவி என்றும் புகழ்ந்து பேசப்பட்டார். இவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தம் இளமையை இலக்கியத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

<u>வினாக்கள்</u> **5 x 1 = 5**

1. பாரதியார் எங்கு பிறந்தார் ?
2. பாரதியாரின் பெற்றோர் யாவர் ?
3. சான்றோர்கள் பாரதி என்று பெயர் சூட்டக் காரணம் யாது ?
4. பாரதியார் எங்கு தமிழாசிரியராகப் பணியாற்றினார் ?
5. பாரதியார் எவ்வாறெல்லாம் புகழ்ந்து பேசப் பட்டார் ?

3) **கடிதம் எழுதுக.** **1 x 6 = 6**

விடுதியில் தங்கியிருக்கும் நீ, கல்விச் சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

4 ) **கட்டுரை எழுதுக.** **1 x 8 = 8**

தொலைக்காட்சியின் நன்மை, தீமைகள்

## பகுதி - ஆ

5 ) **சான்று தருக.** **3 x 1 = 3**

1. **எதிர் இணைச் சொற்கள்**
   அ ) ஈடு இணையற்ற ஆ) பேரும் புகழும்
   இ) மேடு பள்ளம் ஈ) பச்சைப்பசேலென்று
2. **இனமுள்ள அடைமொழி**
   அ ) வெண் திங்கள் ஆ) கருங்காக்கை
   இ) செம்பருந்து ஈ) செந்தாமரை
3. **புறவினா**
   அ ) எவன்? ஆ) ஏது ?
   இ) எம்மனிதன் ? ஈ) யாவன் ?

6 ) **நிரப்புக.** 3 x 1 = 3

1. **இ - என்னும் எழுத்து __________ உள்ள பொருளைச் சுட்டும்.**

அ ) அருகில் ஆ) தொலைவில்

இ) சேய்மையில் ஈ) வெகு தொலைவில்

2. **சொல்லின் இறுதியில் வரும் வினா எழுத்துகள் ____________.**

அ ) எ, ஏ, யா ஆ) ஆ, ஏ, ஓ

இ) அ , இ, உ ஈ) த, ந, ப

3. **வயல் _____________ இருந்தது.**

அ ) வெள்ளை வெளேரென்று ஆ) பச்சைப் பசேலென்று

இ) கன்னங்கரேலென்று ஈ) செக்கச் சிவப்பென

7 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.** 3 x 1 = 3

1. **அம்மயில் ( சுட்டு நீக்கி எழுதுக)**

அ ) வெண் மயில் ஆ) அந்த மயில்

இ) இம்மயில் ஈ) மயில்

2. **வீடு ( அண்மைச்சுட்டு ஆக்குக )**

அ ) அவ்வீடு ஆ) அந்த வீடு

இ) இவ்வீடு ஈ) இந்த வீடு

3. **வேலன் உழைத்தான் (பொருத்தமான இணைச்சொற்களைச் சேர்த்து எழுதுக)**

அ ) வேலன் கடுமையாக உழைத்தான்

ஆ) வேலன் களைப்புடன் உழைத்தான்

இ) வேலன் அல்லும் பகலும் உழைத்தான்.

ஈ) வேலனா உழைத்தான் ?

8 ) **இலக்கணக்குறிப்பு தருக.** 3 x 1 = 3

1. **சீராட்டிப் பாராட்டி**

அ ) நேர் இணைச்சொற்கள் ஆ) எதிர் இணைச் சொற்கள்

இ) செறிவிணைச் சொற்கள் ஈ) அடைமொழி

2. **வெண்புறா**

அ ) இனமில்லா அடைமொழி ஆ) இனமுள்ள அடைமொழி

இ) சேய்மைச்சுட்டு ஈ) அண்மைச்சுட்டு

3. **அந்த குதிரை**

அ ) சுட்டுத் திரிபு ஆ) அண்மைச்சுட்டு

இ) சேய்மைச்சுட்டு ஈ) புறவினா

9 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1. அ) ஏ என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும்

   ஆ) எ என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும்

   இ) யா என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும்

   ஈ ) ஓ என்னும் எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும்

2. அ) அ கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

   ஆ) இ கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

   இ) உ கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் இல்லை.

   ஈ ) உ கரத்தால் சுட்டும் முறை தற்போது வழக்கத்தில் உள்ளது.

3. அ) அடைமொழி இரண்டு வகைப்படும்.

   ஆ) அடைமொழி மூன்று வகைப்படும்.

   இ) அடைமொழி நான்கு வகைப்படும்.

   ஈ ) அடைமொழி ஐந்து வகைப்படும்.

## பகுதி - இ

10) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6 x 1 = 6

1. சாயப் பட்டறைகளிலிருந்து ____________ நீரில் கலக்கின்றன.

   அ ) கழிவுகள் ஆ) துணிகள் இ) நுண்ணுயிரிகள்

2. தணித்தல் என்பதன் பொருள் ___________.

   அ ) அதிகமாக்குதல் ஆ) குறைத்தல் இ) உயர்த்தல்

3. முகர்ந்து பார்த்தாலே வாடும் மலர் ____________.

   அ ) சூரியகாந்திமலர் ஆ) அனிச்சமலர் இ) முல்லை மலர்

4. நல்லன வற்றைக் கேட்பதனால் கிடைப்பது ________.

   அ ) கயமை ஆ) பெருமை இ) சிறுமை

5. விசும்பு என்பதைக் குறிக்கும் சொல் ___________.

   அ ) நிலம் ஆ) காற்று இ) வான்

6. முகடு என்பதன் பொருள் ____________.

   அ ) உயரம் ஆ) உச்சி இ) நீளம்

11) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக** **6 x 2 = 12**

1. **பொருள் தருக.**

   கதிரவன் = ________

   வைகலும் = ________

2. **பிரித்து எழுதுக.**

   மற்றாங்கே = ________

   உடலெல்லாம் = ________

3. **சேர்த்து எழுதுக.**

   காடு + எருமைகள் = ________

   உலகு + எனின் = ________

4. **சொற்றொடர் அமைக்க.**

   எண்ணியெண்ணி

   விண்ணில்

5. **வேறுபாடு கூறுக.**

   வால் , வாள்

   தளை , தழை

6. **பிழைகளை நீக்கி எழுதுக.**

   அதிகாளையில் கோழி கூவும். கதிரவன் உதயமாகும் பொலுது நாம் கண் விளிக்க வேண்டும். ஆதுவே மிகச் சிறந்த பழக்கமாகும்.

12) **ஏதேனும் இரண்டிற்கு மட்டும் குறுகிய விடை தருக.** **2 x 3 = 6**

1. மங்கை மனம் வருந்தக் காரணம் என்ன ?
2. மழை பெய்யாவிடில் ஒழுக்கம் கெடும் - எவ்வாறு ?
3. விருந்தினர் எப்போது, எப்படி வாடுவர் ?

13) **விரிவான விடை தருக.** **1 x 5 = 5**

1. மங்கை கண்ட இயற்கை வளம் பற்றிக் கூறுக.

**14) அடி பிறழாமல் எழுதுக** **3 x 2 = 6**

1. **எனைத்தானும்** - எனத் தொடங்கும் திருக்குறள்
2. **அரிது** - என முடியும் திருக்குறள்
3. **இன்று** - என முடியும் திருக்குறள்

**15) துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** **1 x 6 = 6**

வெற்றியின் முதற்படி

( அல்லது )

**பின்வரும் வரிகளைத் தொடர்ந்து பத்து வரிகளில் சொந்த நடையில் கதை எழுதுக.**

அடர்ந்த காட்டுப்பகுதி, எங்கும் பச்சைப் பசேலென செடி கொடிகள், சிறிதாகத் தூவும் மழை, இயற்கை அழகு கொஞ்சும் மலைப்பகுதி, எழிலுடன் வீழும் அருவி என அழகு நிறைந்த இடமான ............,